**OS.NO:09/2021**

**PW 1 :** திரு முத்துகிருஷ்ணன்

நாள் : 19.06.2024

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

1ம் பிரதிவாதியிடம் நான் ரூ4 இலட்சம் வீதம் இரண்டு தவனையாக மொத்தம் ரூ.8 இலட்சம் வாங்கியதாக வழக்கில் நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். நான் வருமான வரி செலுத்துகிறேன். 1ம் பிரதிவாதியிடம் முதலில் ரூ.4 இலட்சம் கடன் வாங்கிய தேதி, மாதம் நினைவில்லை. ஆனால், 2019ம் ஆண்டு வாங்கினேன். 1ம் பிரதிவாதியிடம் இரண்டாவது முறையாக ரூ.4 இலட்சம் கடன் வாங்கிய தேதி, மாதம் நினைவில்லை. ஆனால், 2019ம் ஆண்டு வாங்கினேன். ரூபாய் 4 இலட்சம் வீதம் இரண்டு தவனையாக நான் கடன் பெற்றதை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேன். என்னுடைய வருமான வரி கணக்கு நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த வருமான வரி கணக்கை பார்த்தால், எவ்வளவு பணம் பெறப்பட்டது, தாவா பரிவர்த்தணையில் எவ்வளவு தொகை பெறப்பட்டது என்ற விவரங்கள் தெரியும் வரும் என்றால், சரிதான். 12–02–2019ல் 1ம் பிரதிவாதி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்குமாறு என்னை மிரட்டி எழுதி வாங்கிகொண்டார். அவ்வாறு மிரட்டி எழுதி வாங்கியது சம்மந்தமாக 12.02.2019 அன்றோ 13.02.2019 அன்றோ நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். என்னை மிரட்டி எழுதி வாங்கியதாக நான் முதன் முதலில் 2020ம் ஆண்டு புகார் கொடுத்தேன். நான் எழுதிகொடுத்த பொது அதிகார பத்திரம் 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த பொது அதிகார

பத்திரத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் எழுதிகொடுத்த விவரம் 2020 ஆண்டு எனக்கு தெரிய வந்தது. அவ்வாறு தெரிய வந்த மாதம், தேதி எனக்கு தெரியாது. அந்த தாவா சொத்தின் வெளிமார்க்கெட் மதிப்பு ரூ. ஒரு கோடியே அறுபது இலட்சம் ஆகும். இந்த விவரத்தை நான் வழக்கிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால், முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை. ஆனால், வழக்கு பிராதில் சொல்லியுள்ளேன். வழக்கு சொத்தின் மதிப்பு ரூ. ஒரு கோடியே அறுபது இலட்சம் என காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தின் வழிகாட்டு மதிப்பு ஒரு ஏக்கர் ரூ.5 இலட்சம் ஆகும். தாவா சொத்தின் அருகில் உள்ள இடங்கள் வழிகாட்டு மதிப்பு படி கிரையங்கள் செய்யப்பட்டுள்ளது என காண்பிக்க வேறு எந்த கிரைய பத்திர நகல்களை பெற்று, தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் 1ம் பிரதிவாதி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்ய வேண்டுமென, 1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை சென்னை உயர்நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டு விட்டது என்றால், எனக்கு அது பற்றி தெரியாது. 1ம் பிரதிவாதிக்கும், அவரது மருமகனுக்கும் எனக்கு பணம் கொடுத்தது சம்மந்தமாக தகராறு ஏற்பட்டது. 1ம் பிரதிவாதியிடம் அவரது மருமகன் உடனே பணம் வேண்டும் என கேட்டு, தகராறு ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் போகமலேயே பொது அதிகார பத்திரம் 2021ம் ஆண்டு இரத்தாகிவிட்டது. 06-07-2020ல் 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால், எனக்கு தெரியாது. நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த தேதி நினைவில்லை.

பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்மந்தமாக விசாரணை செய்ய வேண்டுமென்று, நான் வருவாய் கோட்டாட்சியரிடமோ, மாவட்ட ஆட்சி தலைவரிடமோ இதுவரை மனு அளிக்கவில்லை என்றால், அது தவறு. நான் கொடுத்த மனுவின் பேரில் விசாரணை செய்து, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு உத்தரவு கொடுத்துள்ளார்கள். அந்த மாதிரி உத்தரவு எதுவும் பிறப்பிக்கபடாததால்தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும், அது சரியல்ல. வழக்கு சொத்து என் சுவாதீனத்தில் இருப்பதாகவும், என் அனுபவத்தை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என தடை உத்தரவு கேட்டு, நான் தாக்கல் செய்த மனுவும், தள்ளுபடி ஆகிவிட்டது என்றால், சரிதான். அதன் பேரில் நான் தாக்கல் செய்த சீராய்வு மனுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால், சரிதான். வழக்கு சொத்தின் அனுபவத்தில் 1ம் பிரதிவாதி தான் நாளது வரை உள்ளார் என்றால், சரிதான். சுவாதீனம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல. நான் சொல்லும் சொத்தின் மதிப்பிற்கு ஏற்றாற்போல் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை 2ம் பிரதிவாதி தரப்பில் –**

2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்பட்டது.

**Sd/– M.Selvam, M.L.,**
**I Additional District Judge,**
**Ranipet.**